வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 21.11.2024 வியாழக்கிழமை இதழ் : 325 பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்


WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.




# படைமுகாம்கள் அகற்றும்போது தேசிய பாதுகாப்பு மிக முக்கியம்!

## நாமல் ராஜபக்ஷ கடும் கரிசனை



கொழும்பு, நவம்பர் 21

**வடக்கில் சமீபத்தில் இராணுவ முகாம் அகற்றப்பட்டமை குறித்தும் மேலும் பல முகாம்களை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறித்தும் நாமல் ராஜபக்ஷ கடும் கரிசனை வெளியிட்டுள்ளார்.**

சமூக ஊடகப் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், பொதுமக்களிடம் மீள நிலங்களை ஒப்படைப்பது பொதுவாக பிரச்னைக்குரிய விடயம் இல்லை என்றாலும் நாட்டின் தேசிய பாதுகாப்பு பாதிக்கப் படாமலிருப்பதை உறுதி செய்வதற்காக இது குறித்து பாதுகாப்பு

11

## 26ஆம் திகதி புயல் அபாயம்! வடக்கு - கிழக்கில் கன மழை

யாழ்ப்பாணம், நவ. 21

கிழக்கு வங்காள விரிகுடாவில் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் எதிர்வரும் 23 ஆம் திகதி தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளதாக யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

11

## இந்தியா செல்கிறார் ரணில்

கொழும்பு, நவ. 21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்.

மத்திய இந்தியாவின் இந்தூரில் உள்ள ஸ்ரீ சத்ய ஸ்ரீ வித்யா விஹார் உயர்கல்வி நிறுவனத்தில்

11

## 10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று காலை!

### சபாநாயகர் தெரிவும் இடம்பெறும்

கொழும்பு, நவ. 21

10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று முற்பகல் 10:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கன்னி அமர்வின் போது சபாநாயகர் தெரிவு இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 11:30 மணியளவில் ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார். அதனை தொடர்ந்து சபை நடவடிக்கைகள் அடுத்த அமர்வுக்காக ஒத்திவைக்கப் பட ள்ளது.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் மு.ப 9.00 மணிக்கு பாராளுமன்ற வளாகத்திற்கு வருகை தருமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு வரும்போது

11

## பலாலி இராஜராஜேஸ்வரி அம்மனுக்கு தினந்தோறும் வழிபாடு செய்ய அனுமதி

### 34 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் மகிழ்ச்சி



யாழ்ப்பாணம், நவ. 21

34 வருடங்களின் பின்னர், யாழ்ப்பாணம் பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில், மக்கள் தினந்தோறும் வழிபாடுகளை மேற்கொள்ள நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலப் பகுதியில், உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள, பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி

11

## மன்னாரில் தாய் சேய் பலி; உரிய விசாரணை ஆரம்பம்!

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரசவத்தின் போது தாயும் சேயும் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரசவத்தின் போது தாயும், சேயும் உயிரிழந்திருந்தனர்.

இந்த மரணத்திற்குக் காரணம் வைத்தியசாலையின் கவனயீனம் என உயிரிழந்த 28 வயதுடைய

11

## முல்லைத்தீவில் கோர விபத்து; 2 இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி!

முல்லைத்தீவு, நவ. 21

மாங்குளம் வெள்ளாங்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததோடு ஒருவர் படுகாயமடைந்தார். இந்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மாங்குளம் வன்னிவிளாங்

11

## இந்தியாவுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயார்!

### அநுர தலைமையிலான அரசு அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதி அனுகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் வாழ்த்துச் செய்திக்கு பதிளித்து, சமூக ஊடகத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

எங்கள் கலாசார உறவுகளையும் மற்றும் சிறந்த இரு தரப்பு உறவுகளையும், எங்கள்

11

## சிங்களவர், முஸ்லிம், தமிழர் என்ற மத அடையாளமற்ற அரசுதான் இது!

### முஸ்லிம் அமைச்சர் இல்லையென்ற குற்றச்சாட்டுக்கு பிமல் பதிலளிப்பு

கொழும்பு, நவ. 21

எமது அரசாங்கம் இலங்கையர்களை உள்ளடக்கிய ஒரு அரசாங்கம். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற மத ரீதியான அடையாளங்களை கொண்டிருக்கவில்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இது மிகவும்

11

## ஹரீன் பெர்னாண்டோ நேற்று கைதாகி பிணையில் விடுதலை

கொழும்பு, நவ. 21

தேர்தல் சட்டத்தை மீறிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அவரை பதுளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 11ஆம் திகதி பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது பொலிஸாருடன் இடம்பெற்ற முறுகல் நிலை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஹரீன் பெர்னாண்டோ நேற்று காலை பதுளை பொலிஸில் முன்னிலையாகியிருந்த நிலையில், கைதுசெய்யப்பட்டார்.

அண்மையில்

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது!

நண்பர் ஒருவர் ஒரு காணொலி ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் ஒரு பாட்டுக்கு தமிழ் கட்சி ஒன்றின் தலைவர் ஒருவர் கம்பீரமாக நடந்து வந்துகொண்டிருந்தார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்தவர் அவர். ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் பெற்று மக்களுக்கு 'சேவை' செய்தவர் அவர்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆறாயிரத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்று எம்.பி.யாகி இருப்பவர். தன்னைப் புகழ்ந்து இளைஞர்கள் பாடிக்கொண்டிருக்க அதனை ரசித்துக் கொண்டிருக்கிறார். அரசியல்வாதிகள் என்றாலே அதுகும் நீண்டகால அரசியல்வாதிகளுக்கு வெட்கம் இருக்காது தான்.

நேற்றுக் காலை இன்னுமொரு நண்பர் ஒரு காணொலியை அனுப்பினார். அதே தலைவரின் பேட்டி அதில் இடம்பெற்றிருக்கிறது. கிளிக் பண்ணி பார்க்க மனம் தரவில்லை. ஆனாலும் அந்த காணொலிக்கு போடப்பட்ட தலைப்பு உள்ளே இருப்பது என்ன என்பதை பேசியது.

"வீட்டுடன் இணையத் தயார். தலைவர் காட்டிய வீட்டு சின்னத்திற்கே மக்கள் வாக்களித்துள்ளனர்."

இதுவே அந்த காணொலிப் பேட்டிக்கு தலைப்பு.

வடக்கில் வீட்டுக்கு வாக்களித்தவர்கள் தொண்ணூறு ஆயிரம்பேர். அவர்களின் சங்குக்கு வாக்களித்தவர்கள் நாற்பத்தி மூவாயிரம்பேர். ஆனால் திசைகாட்டிக்கு வாக்களித்தவர்கள் ஒரு லட்சத்தி இருபதாயிரம் பேர்.

இவருக்கு தலைவர், நாம் அறிந்து சிறி சபாரத்தினம் தான். சிலவேளை தமிழ் மக்கள் பெருவாரியாக திசைகாட்டிக்கு வாக்களித்திருப்பது இவரது தலைவர் மேலே இருந்து காட்டியதாலேயோ தெரியவில்லை.

அல்லது அவர்களுக்கு வாக்களித்த நாற்பதாயிரம் பேரும் தலைவரின் வழிகாட்டலை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறாரோ?

- ஊர்சுற்றி

# மணல் மாபியா கும்பலால் தாக்கப்பட்ட கிளிநொச்சி தொழில்நுட்ப அலுவலர்!

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சியில் செயற்பட்டுவரும் வடமாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மணல் மாபியா கும்பலால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள் ளது.

குறித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைச்சிப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சகிதம் பணியிலிருந்தபோது தாக்கப்பட்டதாக இலங்கை வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தலுக்கு முதல் நாளான கடந்த 13ஆம் திகதி அன்று கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் அம்பாள்குளம் 2ஆம் குறுக்குத்தெரு வீதியின் புனரமைப்பு வேலைக்காக பறிக்கப்பட்ட கிரவலை கரைச்சிப் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் கூட்டளவு மேற்கொண்டிருந்தவேளை அங்கு வந்த நான்கு ஐந்து பேர் கொண்ட குழு தாக்குதலை நடத்தியதாக தெரியவருகின்றது.

கையினாலும் பொல்லுகளாலும் தனது முகத்திலும் தலையிலும் நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான தொழில்நுட்ப உத்தியோகத்தர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தனது கடமையை செய்யவிடாது தடுத்து வீதியில் துரத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் கொலை செய்து புதைப்போம் என்றும் கிளிநொச்சி பகுதியில் எங்கு என்னைக் கண்டாலும் கொலை செய்வோம் எனக் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பில் அவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினைப் பதிவு செய்ததுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரியவருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட தேர்தல் பணிகளில் வாக்கெண்ணல் சிரேஷ்ட தலைமைத் தாங்கும் அலுவலராக நியமிக்கப்பட்டிருந்தும் தேர்தல் கடமைக்குச் சமூகமளிக்க முடியவில்லை எனவும் தாக்குதலுக்குள்ளான தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலை நடத்தியவர்கள் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல மணல் கடத்தல் மாபியாக்கள் என தெரிவித்துள்ள இலங்கை வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகள், பணியில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசு தவறினால் தொடர் பணிபுறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ)

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பம்





யாழ்ப்பாணம், நவ. 21

தென்மராட்சி வலயப் பாடசாலைகள் இணைந்து நடத்தும் கல்விக் கண்காட்சி நேற்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பமானது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் ஆரம்பமான கல்விக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதீகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.பத்மதாஸ் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மாணவர்களுடைய கல்விக் கண்காட்சி நிகழ்வைப் பார்வையிட்டிருந்தனர். குறித்த கண்காட்சி இன்று பிற்பகல் 3.00 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆறுமுகநாவலர் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், நவ. 21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சிறீலசிறீ ஆறு முகநாவலர் மணிமண்டபத்தில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆறு முகநாவலர் குருபூஜை விழா நடைபெறவுள்ளது. ஆறுமுகநாவலர் குருபூஜையைத் தொடர்த்து பஞ்சபுராணம் ஓதுதல், நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவி பைரவி வீரகேசனும், இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந. பரமேஸ்வரனால் திருமுறை சமர்ப்பணமும், ஆறுமுக நாவலர் என்னும் விடயப் பொருளில் சிறீநந்தகோபன் அணிகனின் கதாப்பிரங்கம் மற்றும் ஞான ஏந்தல் பரமேஸ்வரனின் மாண வர்கள் வழங்கும் திருப்புகழ் கச்சேரியும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

# முகக்கவசக் கொள்ளையனை பிடிக்க மக்களின் உதவியை நாடும் பொலிஸ்!

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்.மாவட்டத்தில் முககவசம் அணிந்து தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை பொலிஸார் சி.சி.ரி.வி கமரா மூலம் அடையாளம் கண்டுள்ளனர்.

கோப்பாய் ,யாழ்ப்பாணம் பகுதிகளில் இரவு வேளையில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்தவரே இவ்வாறு சி.சி.ரி.வி கமராவில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இரவு 1 மணி தொடக்கம் 3மணி இடைவெளியில் முகக்கவசம் அணிந்து சைக்கிளில் நடமாடுவதாகவும் இதுவரையான காலப்பகுதியில் 8 வீடுகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் கடந்த வாரமளவில் யாழ். செட்டிதெரு வீதியிலும் திருட்டு சம்பவமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கி, நிதி நிறுவனங்கள் ,கம்பனிகளில் பணி புரிவோர் மற்றும் வைத்தியர்களின் வீடுகளிலேயே இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளது.

எனவே பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் சந்தேக நபரை கைது செய்ய உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நாட்டில் நெல் தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 21

நாட்டில் தற்போது நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட குறித்த சங்கத்தின் தலைவர் கே.சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இரத்தினபுரி மற்றும் பொலனறுவை மாவட்டங்களைச் சேர்ந்த நெற்செய்கையாளர்கள் தமது விவசாயத்தைத் தொடர்வதற்குத் தேவையான உரங்கள் கிடைக்காததன் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.11.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# கல்வித் தகைமையும் அரசியலும்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் பதவியேற்றிருக்கும் புதிய அமைச்சரவை அதன் கடமைகளில் இறங்கியிருக்கிறது. தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் எந்தளவுக்கு பிரமாண்டமான ஆணையை பாராளுமன்ற தேர்தலில் வழங்கினார்களோ அதேயளவுக்கு அரசாங்கத்திடம் பிரமாண்டமான எதிர்பார்ப்புக்களையும் கொண்டிருக்கிறார்கள். உடனடியாகவே அந்த எதிர்பார்ப்புகளை எல்லாம் நிறைவேற்றிவிட முடியாது. அதற்கு கணிசமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு காரணமான முன்னைய அரசாங்கங்களின் தவறுகளில் இருந்து முறையான படிப்பினைகளைப் பெற்று ஊழல் மோசடிகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் இடமளிக்காமல் புதிய அமைச்சரவை செயற்படும் என்ற நம்பிக்கையையும் மக்கள் கொண்டிருக்கிறார்கள்.

முன்னைய அரசாங்கங்களில் அமைச்சர்களாக இருந்தவர்களில் பலர் அரசியலையே தொழிலாகக் கொண்டவர்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் உயர்ந்த கல்வித் தகைமைகளை கொண்டவர்களாக இருந்தபோதிலும், கணக்கில் எடுக்கத்தக்க கல்வித்தகைமை இல்லாத உறுப்பினர்களின் செயல்பாடுகளில் இருந்து அவர்களில் பலரின் செயல்பாடுகளில் பெரிதாக வேறுபாட்டைக் காணக்கூடியதாக இருக்கவில்லை.

இத்தகைய பின்புலத்தில், புதிய அமைச்சரவை உறுப்பினர்களில் அதிகப் பெரும்பானமையானவர்கள் உயர்ந்த கல்வித்தகைமைகளை கொண்டவர்களாகவும் குறிப்பாக பல்கலைக்கழக கல்விமான்களாகவும் துறைசார் நிபுணர்களாகவும் இருப்பது பெரு மகிழ்ச்சியை தருகிறது.

21 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையில் 13 பேர் பாராளுமன்றத்துக்கு புதுமுகங்கள். ஆனால், அவர்களின் கல்வித் தகைமைகளை நோக்கும்போது இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு மிகவும் தகைமைவாய்ந்த உறுப்பினர்களை பெருமளவில் கொண்டதாக புதிய அமைச்சரவையே விளங்குகிறது எனலாம். அறியக் கூடியதாக இருக்கும் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது மூவரைத் தவிர ஏனைய அமைச்சர்கள் பல்கலைக்கழக கல்விமான்களாகவும் துறைசார் நிபுணர்களாகவும் இருக்கிறார்கள்.

இலங்கையில் மார்க்சிய வேர்களைக் கொண்ட இடதுசாரி கட்சியொன்று இலங்கையில் பாராளுமன்ற பாதையூடாக அதிகாரத்துக்கு வந்திருப்பது இதுவே முதற்தடவை. தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி.) பொறுத்தவரை, பழைய பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளைப் போன்று வெறுமனே பாராளுமன்ற பாதையில் மாத்திரம் நம்பிக்கை வைத்து அதன் அரசியல் பயணத்தை தொடங்கிய இயக்கம் அல்ல.

ஜே.வி.பி. அதன் சுமார் ஆறு தசாப்த கால அரசியல் பயணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தி பயங்கரமான அடக்குமுறை அனுபவங்களுக்குப் பிறகு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து இன்று சகல பிரதான அரசியல் கட்சிகளையும் கிரகணம் செய்து கொண்டு மக்களின் மகத்தான ஆணையுடன் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

மூன்று தசாப்தங்களாக ஜே.வி.பி. ஜனநாயக அரசியலில் இருக்கின்றபோதிலும், கடந்த இரு ஜனநாயக தேர்தல்களின்போதும் அதன் வன்முறைக் கடந்தகாலத்தை நினைவுபடுத்துவதில் பிரதான கட்சிகள் எனப்படுபவை தீவிரமாக ஈடுபட்டிருந்தன. ஆனால், மக்கள் மக்கள் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது ஜனாதிபதி தேர்தலில் திஸநாயக்கவுக்கு வழங்கிய வாக்குகளையும் விட கூடுதலான அளவுக்கு அமோகமாக பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகளை அளித்திருக்கிறார்கள்.

தொழிலாளர் வர்க்க புரட்சிபற்றி பேசிய இடதுசாரி கட்சி ஒன்று அரசாங்கத்தை அமைக்கிறதென்றால், அதில் பெரும்பாலும் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்தவர்களும் தொழிற் சங்கவாதிகளுமே அமைச்சர்களாக இருப்பார்கள் என்ற எண்ணமொன்று பொதுவெளியில் இருக்கும்.

ஆனால், அதற்கு முற்றிலும் முரணாக ஜனாதிபதி திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் உயர்ந்த கல்வித்தகைமைகளை கொண்டவர்களை அதிகமாகக் கொண்ட அமைச்சரவையுடனானது என்று வரலாறு படைத்திருக்கிறது. ஒக்ஸ்பேர்ட் பட்டதாரிகளான தலைவர்கள் கடந்த காலத்தில் அமைத்த அமைச்சரவையில் கூட தற்போதைய அமைச்சரவையைப் போன்று அதிகம் கல்விமான்கள் இருந்ததில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024



"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."
- மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)

# யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம்!



60 குடும்பங்கள் பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் - குருநகர் தொடர்மாடிக்கு அருகாமையிலுள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சுமார் 60 வீடுகளுக்குள் இவ்வாறு வெள்ள நீர் புகுந்துள்ளதால் அவர்கள் உறவினர்களது வீடுகளுக்கு இடம்பெயர வேண்டி சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வெள்ளநீர் வடிந்தோடிக்கொண்டு இருக்கிறது. இருப்பினும் வெள்ளம் புகுந்த பல வீடுகளில் மக்கள் வசிக்க முடியாத நிலை காணப்படுகிறது. (எ-05)

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தியான மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 21

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தியான மண்டப திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9. 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் கணித பாட ஆசிரியை அமரர் திருமதி சரசரட்ணம் ஞாபகார்த்தமாக அவரது கணவரும் சமூக செயல்பாட்டாளருமான க. புலந்திரலிங்கம் வழங்கிய 4 மில்லியன் ரூபாய் நிதி அனுசரணையுடன் இத் தியான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் இ. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் தம்பாபிள்ளை குகதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(எ-02)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியாவில் பல உதவிகள்






வடமராட்சி நவ20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை வரவு குறைந்த மாணவர்களின் வரவை மேம்படுத்துவதற்காகவும், பொதுப் போக்குவரத்து வசதியை இலகுபடுத்துவதற்காகவும், மாதாந்தம் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டு றவு சங்கத்துக்கு வழங்கும் போக்குவரத்து சேவைக்கான இம்மாத வாகன கொடுப்பனவு 85, 650 ரூபாய் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா, கல்மடு பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் 61 முதியோர்களுக்கு 170, 000 ரூபாய் பெறுமதியான உடைகளும் மற்றும் 30,000 ரூபாய் நிதியும் வழங்கப்பட்டன.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**இடபம்**
துணிச்சலாக சில முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். முதலீடு செய்வீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச் சுமை இருந்துகொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது தவிப்பீர்கள். லாபம் குறையும்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்க பலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். விலை உயர்ந்தப்பொருட்கள் வாங்குவீர்கள். புதுஏஜென்சி எடுப்பீர்கள்.

**துலாம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். கணுக்கால் வலிக்கும். பாதியில் நின்றவேலைகள் முடியும். நல்ல செய்தி வரும்.

**தனுசு**
மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். உங்களை யாரும் முக்கியத்துவம் தருவதில்லை என்றெல்லாம் சில நேரங்களில் புலம்புவீர்கள்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்புவரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். கடன் வாங்காதீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

# வவுனியா மாவட்டத்தில் இதுவரை 83 வீதமான மழை வீழ்ச்சியே பதிவு

வவுனியா, நவ. 21

வவுனியா மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் 19 ஆம் திகதி வரை 83 வீதமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா. சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் பதிவான மழைவீழ்ச்சி தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை ஆண்டுக்கு சராசரியாக 1200 தொடக்கம் 1400 மில்லி மீற்றர் அளவிலேயே மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறுகின்றது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 994.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த நிலையில் வருகின்ற 40 நாட்களுக்குள் 300 மில்லி மீற்றர் அளவிலான மழைவீழ்ச்சியே பதிவாகும்.



இந்த வருடம் குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தது. இனிவரும் காலப்பகுதியில் பெய்யும் மழை சாதாரண மழையாகவே காணப்படும். நவம்பர் இறுதி, டிசெம்பர் மாதங்களில் மழை அதிகமாக காணப்பட்டாலும் சராசரி மழை வீழ்ச்சியாகவே காணப் படும் எனவும் அவர் கூறினார். (எ)

# இராணுவ அதிகாரிக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் முப்படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரசிங்கவுக்கு பிரியாவிடை மற்றும் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டு மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரசிங்கவுக்கு வாழ்த்து பாமாலை வழங்கிவைத்தார். அத்துடன் ஆலய நிர்வாகத்தினர், அரச அதிகாரிகள் தமது கௌரவிப்பை வழங்கினர்.



இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன், யாழ்ப் பாணம் போதனா மருத்து வமனை பணிப்பாளர், வைத் திய கலாநிதி த. சத்திய மூர்த்தி, மற்றும் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவ - பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-05)

# இளம் தாய் சிந்துஜா மரணம் பொலிஸாருக்கு கால அவகாசம்

மன்னார், நவ. 21

மன்னார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் சிந்துஜா, மன்னார் மருத்துவமனையில் மரணமடைந்த நிலையில், இந்த மரணம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் மற்றும் பெற்றோர்கள் முன் வைத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் விசா ரணைகள் இடம்பெற்று வருவதாக நம்பப் பட்டு வந்த போதும் விசாரணைகள் மந்த கதியில் இடம் பெற்றமை நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிந்துஜாவின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட நிலையில் சில நாட்களுக்கு முன்பாக தான் குறித்த வழக்கு மன்னார் பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மன்னார் குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் மன்னார் மடு பொலிஸார் குறித்த வழக்கு விசாரணையை பி வழக்காக பதிவு செய்யாது சாதாரண வழக்காக பதிவு செய்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி டெனிஸ்வரன் மற்றும் சர்மிலன் டயசின் ஆகியோரின் கோரிக்கையை ஏற்று குறித்த வழக்கு தொடர்பான விசாரணையை துரிதப்படுத்தி இரண்டு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதே நேரம் வழக்கை பி அறிக் கையாக தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு மேலதிக விசாரணைக்காக டிசெம்பர் மாதம் 03 திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (எ)

# வவுனியாவில் பெண் சுட்டுக்கொலை இளைஞன் பொலிஸாரால் கைது

வவுனியா, நவ. 21

வவுனியா ஈச்சங்குளம் பிரதேசத்தில் பெண் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்று

இந்தச் சம்பவம் குறித்து ஈச்சங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பில் சந்தேக நபர் வவுனியா சுந்தரபுரம் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா சுந்தரபுரம் பிரதேசத் தில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து உள் நாட்டு தயாரிப்பு துப்பாக்கி ஒன் றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத் தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில்தெரியவந்துள்ளது.இது தொடர்பான விசார ணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர்.(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

## நிதித்துறையை வலுப்படுத்துவதற்காக

கொழும்பு, நவ. 21

**இலங்கை அரசாங்கத்தின் நிதித்துறையை மேலும் வலுப்படுத்த உதவுவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடனை, தாம் அங்கீகரித்துள்ளதாக, ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.**

பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதிலும் நிதி நிலைமையை மேம்படுத்துவதிலும் இலங்கை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தநிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி, தனது நிதித்துறையில் கட்டமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி நிறுவனமயமாக்குவதன் மூலம் நாட்டை நீண்டகால வளர்ச்சியை நிலைநிறுத்த உதவுகிறது என்று வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி தேசியப் பட்டியல் உறுப்பினராக ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, நவ. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவை அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தது.

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியில் இன்னும் 4 தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் அறிவிக்கப்படவுள்ளனர்.

இம்முறை பொதுத் தேர்தலில் பல கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்த நிலையில், அதில் பல கட்சிகள் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை கோரியுள்ளதன் காரணமாக தற்போது பிரதிநிதிகள் நியமனம் தொடர்பில் நெருக்கடிகளை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




# கட்டுநாயக்கவில் தரையிறங்கிய மிகப்பெரிய பயணிகள் விமானம்!

கொழும்பு, நவ. 21

கட்டார் எயார்வேய்ல் இயக்கப்படும் உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமானங்களுள் ஒன்றான எயார்பஸ் ஏ 380 நேற்று முன் தினம் இரவு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட குறித்த விமானம் எரிபொருள் நிரப்புதல் மற்றும் பணியாளர்களை மாற்றுவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டது.

குறித்த நடவடிக்கைகளின் பின்னர் விமானம் மீண்டும் கட்டாரின் டோஹா நோக்கி பயணத்தை ஆரம்பித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விமானப்படைச் சிப்பாய் உள்ளிட்ட இருவர் கொலை தொடர்பில் கைது!

கொழும்பு, நவ. 21

தெஹிவளை, கல்கிஸை மாநகர சபையின் ஊழியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விமானப்படைச் சிப்பாய் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி தெஹிவளை நெதிமால பிரதேசத்தில் 46 வயதுடைய அநுர கொஸ்தா என்ற நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, ஆறு தோட்டாக்கள், சந்தேக நபர்கள் சுட வந்த மோட்டார் சைக்கிள் என்பன பல பாகங்களாக பிரித்து வேறாக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று முன் தினம் ஹோமாகம பனாகொட இராணுவ முகாமுக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை கைது செய்தனர்.

இதன்போது, அவரது சூட்கேஸில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கி மற்றும் 6 தோட்டாக்களை பொலிஸார் கண்டுபிடித்தனர். இதன்படி, சந்தேக நபர் வெளிப்படுத்திய தகவலின் பிரகாரம், கொலைக்காக மோட்டார் சைக்கிளில் சந்தேக நபருடன் வந்த மற்றைய நபர் அத்துகிரிய மொரட்டுவாஹேன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின்போது, மோட்டார் சைக்கிள் பல பாகங்களாக பிரிக்கப்பட்டு பாதுக்க பிரதேசத்தில் உள்ள விமானப் படை சிப்பாய் தங்கியிருந்த வாடகை வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், தற்போது வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான படோவிட அசங்க மற்றும் அசந்த குமார் என்ற லெடா ஆகியோர் வழங்கிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் வர புதிய அரசு ஒரு புதிய பாதையாகும்

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 21

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டு வர புதிய அரசாங்கம் ஒரு புதிய பாதையாகும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பொதுஜன பெரமுனவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.



பொதுஜன பெரமுனயின் எதிர்கால செயற்பாடுகளை நம்பிக்கையோடு கொண்டு செல்ல இந்த பொதுத் தேர்தல் ஒரு முக்கிய பலமாக இருந்தது.

இந்நிலையில், 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அதிகபட்ச வாக்குகளை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்திக்கு எனது வாழ்த்துக்கள்.

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டு வர இந்த புதிய அரசாங்கம் ஒரு புதிய பாதையாகும்.

நாட்டில் நிலவும் பொருளாதார, சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இந்த மாபெரும் வெற்றியைப் பயன்படுத்துங்கள்.

அத்துடன் புதிய அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட நாம் ஒருபோதும் மறுப்பு தெரிவிக்க மாட்டோம்-என்று கூறியுள்ளார். (அ)




# கொழும்பு வந்த வாஸ்கோடகாமா

கொழும்பு, நவ. 21

வாஸ்கோடகாமா என்ற அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

689 பயணிகள் மற்றும் 460 பணியாளர்களுடன் குறித்த கப்பல் இந்தியாவில் இருந்து நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

இது ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் இந்தியாவிலிருந்து கொழும்பு, காலி மற்றும் திருகோணமலைக்கு செல்லும் பயணிகளை சுமந்து வந்துள்ளது.

போர்த்துக்கல் கொடியுடன் வந்துள்ள இந்த பயணிகள் கப்பல் இன்று இரவு இந்தோனேஷியா நோக்கி புறப்படும். (அ)

# ரவியின் தேசிய பட்டியல் ஆசனம் ஐ.தே.க.வுக்குள் பெரும் குழப்பம்!

கொழும்பு, நவ. 21

பாராளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி பெற்ற இரண்டு தேசியப்பட்டியல் எம்.பி. பதவிகளில் ஒன்றுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை கூட்டுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் லசந்த குணவர்தன இந்த கோரிக்கையை கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

கட்சியின் செயலாளர் ரவி கருணாநாயக்க இந்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை [illegible] நடைமுறை மற்றும் கட்சியின் அங்கீகாரம் இன்றி பெற்றுள்ளதாக கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கட்சியின் அரசியலமைப்பை கடுமையாக மீறும் செயலாகும் என்பதால், கட்சியின் செயற்குழுவை விரைவில் கூட்டி இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கைகளை முடிவெடுக்க வேண்டும் என்றும் லசந்த குணவர்தன கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப்பொறுப்பு ஒன்றை முஸ்லிமுக்கு வழங்காதது ஏன்?

## ஹேஷா விதானகே கேள்வி

கொழும்பு, நவ. 21

**இஸ்லாமியர் ஒருவருக்கு அமைச்சுப்பொறுப்பை வழங்காமைக்கு காரணம் என்ன என பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்லாமியர் ஒருவருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அமைச்சு பொறுப்புக்களை இஸ்லாமியருக்கும் வழங்கியுள்ளோம்.

ஏனெனில் நாட்டில் ஏராளமான இஸ்லாமியர்கள் உள்ளனர். இத்தகைய பின்னணியில் இஸ்லாமியர் ஒருவருக்கு ஏன் அமைச்சு பொறுப்பை வழங்க முடியாது என அரசாங்கத்திடம் வினவ விரும்புகின்றோம்

அரசாங்கத்தின் அமைச்சரவை நியமனத்தில் சில குறைபாடுகள் உள்ளன. அவை தொடர்பில் குரல் கொடுக்கும் உரிமை எமக்குள்ளது. இஸ்லாமியருக்கு அமைச்சு பொறுப்பு ஒன்று வழங்காமைக்கு காரணம் என்ன என வினவ விரும்புகின்றோம்-என்றார். (அ)



# பொய்யான ஆவணங்களுடன் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள முயற்சித்த 18 பேர் கைது!

## அவர்களில் 12 பெண்கள் உள்ளடக்கம்

கொழும்பு, நவ. 21

பொய்யான ஆவணங்களுடன் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள முயற்சித்த 12 பெண்கள் உட்பட 18 பேர் பத்தரமுல்லை பெலவத்தை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கைது செய்யப்பட்டுள்ளர்.

கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்காக போலி இலக்கங்கள் மற்றும் உத்தியோக பூர்வ முத்திரைகள் கொண்ட ஆவணங்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு சமர்ப்பித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடவுச்சீட்டு பெறுவதற்காக திணைக்களத்துக்கு வரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிப்பவர்கள் அனைவருக்கும் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் ஆவணங்களில் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த குழுவினர் அந்த இலக்கங்களை நுட்பமாக மாற்றிய மைத்து போலியாக ஆவணங்கள் தயாரித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய படிவத்தின் மேல் எழுதப்பட்ட மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பனவின் உத்தியோகபூர்வ முத்திரையும் போலியாக உருவாக்கப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விளையாட்டுத்துறை மேம்படுத்தப்படும்!

## அமைச்சர் சுனில் குமார கமகே

கொழும்பு, நவ. 21

எதிர்காலத்தில் அரசியல் தலையீடு இல்லாமல் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சில் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மெலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கடந்த காலங்களில் விளையாட்டுத் துறையில் அரசியல் தலையீடு காணப்பட்டது. காட்டில் மலரும் பூக்கள் காட்டிலேயே உதிர்வதைப் போல எமது இளைய சமுதாயத்தினரின் திறமைகள் மறைக்கப்பட்டன.

உள்நாட்டு வருமானத்தின் ஊடாக விளையாட்டுத் துறையை



அபிவிருத்தி செய்திருக்க முடியும். எனினும் அரசியல் தலையீடு காரணமாக கடந்த கால அரசாங்கங்கள் அவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

பல்வேறு சம்மேளனங்களின் ஊடாகவும் பாதிப்புகள் ஏற்பட்டன.

எனினும் இனிவரும் காலங்களில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் விளையாட்டுத் துறை அபிவிருத்தி செய்யப்படும். விளையாட்டுத் துறை அபிவிருத்திக்காக சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்-என்றார். (அ)

# ஜனாதிபதி அலுவலகத்தை பார்வையிட்ட மாணவர்கள்

கொழும்பு, நவ. 21

இரத்தினபுரி கரவிட்ட மத்திய கல்லூரி, புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி மற்றும் ருவன்வெல்ல இராஜசிங்க மத்திய கல்லூரி மாணவிகள் ஜனாதிபதி அலுவலகத்தை பார்வையிட்டனர்.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் நாடாளுமன்ற மக்கள் தொடர்பாடல் பிரிவு ஆகியன இணைந்து செயற்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஊடாக, ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றை பார்வையிடுவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி கரவிட்ட மத்திய கல்லூரி, புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி மற்றும் ருவன்வெல்ல இராஜசிங்க மத்திய கல்லூரி மாணவிகள், ஜனாதிபதி அலுவலகத்தை பார்வையிடுவதற்காக நேற்று முன் தினம் சென்றிருந்தனர்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சென்ற மாணவர்களுக்கு பாராளுமன்ற வரலாறு குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

இதனை முன்னிட்டு அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களும் மாணவர்களும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கியதுடன், ஜனாதிபதி செயலகத்தினால் அந்தந்த பாடசாலைகளில் நடுவதற்கு பெறுமதியான மரக்கன்றுகளும் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் பாடசாலை மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அலுவலக பணிப்பாளர் நாயகம் (சட்டம்) சட்டத்தரணி ஜே.எம்.பண்டாரவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (அ)

# பொலிஸார் மீது தாக்குதல்!

கொழும்பு, நவ. 21

தெல்தெனிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திகன, அளுத்வத்தைப் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்டவர்களை கைது செய்யச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரு பொலிஸார் காயமடைந்து தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாடசாலை உபகரணங்களின் கொள்வனவுக்கு கொடுப்பனவு

## தகுதியான மாணவரை அடையாளம் காணும் வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, நவ. 21

பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத பிள்ளைகளுக்கு அரசாங்கத்தால் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய, கொடுப்பனவு வழங்குவதற்கு தகுதியான மாணவர்களின் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அனைத்து தகவல்களையும் இன்றைய தினத்துக்குள் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இந்த சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, அந்த குடும்பங்கள் குறித்த தகவல்களை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கொடுப்பனவு வழங்கப்படும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# வீடு மீது மண் மேடு வீழ்ந்து பாடசாலை மாணவி மரணம்!

கொழும்பு, நவ. 21

கண்டி, தெல்தெனிய - தென்னலந்த பகுதியில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பல்கலைக்கழகங்களுக்கு 40,000 மாணவர்கள் பதிவு

கொழும்பு, நவ. 21

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு பதிவு செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் சுமார் 40,000 மாணவர்கள் பதிவு செய்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் அனைத்து மருத்துவ பீடங்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் ஆகியவற்றுக்கு பதிவு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 43,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யாத மாணவர்களுக்கு பதிலாக வேறு மாணவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# அமெரிக்காவில் கற்கும் இலங்கை மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 21

சர்வதேச கல்வி பரிவர்த்தனை திட்டங்கள் தொடர்பான அமெரிக்காவின் அறிக்கையின்படி, அமெரிக்க கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை 10 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான கல்வித் தொடர்புகளை இந்த எண்ணிக்கை அதிகரிப்பு காட்டுகிறது என தெரிவித்துள்ளார்.

எடியுகேசன் யு.எஸ்.ஏ. போன்ற நிகழ்ச்சிகளின் மூலம், இந்த கலாச்சார பரிமாற்றத்தில் ஆர்வமுள்ள இலங்கையர்களுக்கு ஆதரவளிக்க தாங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், மேலும் அமெரிக்காவில் படிப்பதன் மூலம் கிடைக்கும் வாய்ப்புகளைக் கருத்தில் கொள்ள இலங்கை மாணவர்களை ஊக்குவிப்பதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவர்!

## ரோஹித அபேகுணவர்தன பாராட்டு

கொழும்பு, நவ. 21

“மகிந்த ராஜபக்ச என்பவர் அனைவருக்கும் முன்மாதிரியான தலைவர்.” - என்று ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்த அணியை கைவிட்டு ரணில் பக்கம் தாவிய முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரோஹித கூறியவை வருமாறு-

மகிந்த ராஜபக்ஷ எமக்கு தந்தைபோல் பலமாக இருப்பவர். களுத்துறை மாவட்ட மக்கள் என்னை மறக்கவில்லை. அதனால்தான் பொதுத்தேர்தலில் வெற்றி பெறவைத்தனர். ரோஹிவை தோற்கடிக்க முடியாது என மகிந்த ராஜபக்ஷவும் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அனைவருக்கும் முன்மாதிரியான தலைவர். எனவே, நாம் எதிரணியில் இருந்து எமக்குரிய பொறுப்பை



நிறைவேற்றுவோம்-என்றார்.

பொதுத்தேர்தலில் ரோஹித அபேகுணவர்தன, களுத்துறை மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

(அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட சோதனை!

கொழும்பு, நவ. 21

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அறிக்கையொன்றை வெளியிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 25ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி வரையில் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பிரதான மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலை என்பவற்றை சோதனையிட்டு, காலாவதியான மற்றும் விவரங்கள் திரிபுபடுத்தப்பட்ட பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதைத் தடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குறித்த காலப் பகுதியினுள் சிறப்பங்காடிகள் உள்ளிட்ட சில்லறை விற்பனை நிலையங்கள், மலிவு விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் வர்த்தகங்கள் குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# ரூபா 75 மில்லியன் கொள்ளை; சந்தேகநபர் கம்பஹாவில் கைது!

கொழும்பு, நவ. 21

மினுவாங்கொடை பகுதியில் பாதுகாப்பாகப் பணத்தைக் கொண்டு செல்லும் வானுடன் பணத்தை கொள்ளையிட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வானின் சாரதியாகக் கடமையாக பணியாற்றிய சந்தேக நபர் நேற்று முன்தினம் 75 மில்லியன் ரூபாய் பணத்துடன் வானை கொள்ளையிட்டுச் சென்றார்.

பின்னர் குறித்த வான் கம்பஹா - உக்கல்கொட பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்த நிலையில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய, குறித்த சந்தேக நபர் கம்பஹா - கடுவன்கஹா பகுதியில் வைத்துக் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, 3 கோடியே 15 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் மீட்கப்பட்டுள்ளது.

(அ)

# ரவி கருணாநாயக்க விவகாரம் எங்களுக்கு அப்பாற்பட்ட விடயம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ரவிகருணாநாயக்க நியமிக்கப்பட்டமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அப்பாற்பட்ட விடயம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் நியமனத்திற்கான பெயரை உத்தியோக பூர்வமாக சமர்ப்பித்துள்ளமையால் வர்த்தமானியில் வெளியிடும் தனது கடமையை தேர்தல்கள் ஆணைக்குழு செய்துள்ளது என அவர் கூறினார்.

உத்தியோகபூர்வ பட்டியலை கட்சியின் பொதுச்செயலாளர் கையளித்ததும்,ஆணைக்குழு அதனை உத்தியோகபூர்வ நடவடிக்கையாகவே கருதும் என



அவர் குறிப்பிட்டார்.

எந்த சூழ்நிலையிலும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.

(அ)

# ரவியின் எம்.பி. நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தமுடியாது

## மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 21

ரவி கருணாநாயக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் அடிப்படையிலேயே தேசிய பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அதனை சவாலுக்கு உட்படுத்த முடியாது என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின்படி ( 99 ஏ பிரிவு) தேசியப்பட்டியலில் பெயர்கள் உள்ளவர்களையும் தோல்வியடைந்தவர்களையும் பாராளுமன்றத்தில் உள்வாங்கலாம் என அவர் தெரிவித்தார்.



புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் தேசியப்பட்டியல் நியமனம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதால் எவரும் எதுவும் செய்ய முடியாது. பொதுத்தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் நியமனங்களை மேற்கொள்ளும் போது தோல்வியடைந்த வேட்பாளர்களை நியமிக்கலாம் என மகிந்த தேசப்பிரிய கூறினார்.

புதிய ஜனநாயக முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு தேசியப் பட்டியல் வேட்பாளர்களில் ஒருவர் ஓய்வு பெற்றால் ரணில் விக்கிரமசிங்கவை கூட நியமிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# கொழும்பு பிரதேசத்தில் இருக்கும் மது கடைகளில் திடீர்ச் சோதனை!

கொழும்பு, நவ. 21

கொழும்பு பிரதேசத்தில் மதுபானம் விற்பனை செய்யும் சு.டீ.04 உரிமம் பெற்ற பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது பாதுகாப்பு முத்திரைகள் இல்லாத மற்றும் சந்தேகத்திற்கிடமான பாதுகாப்பு முத்திரையுடன் கூடிய வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, பாதுகாப்பு முத்திரை ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட உரிமம் பெற்ற வளாகங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

குறித்த வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் மேலதிக விசாரணைகளுக்காக மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய மக்கள் சக்திக்கு சவாலாக நாம் எழுவோம்

## கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, நவ. 21

2029 ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக நாங்கள் எழுச்சி பெறுவோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பிச் சென்று தோல்வியடைந்தவர்கள் எம்முடன் இணைந்துக் கொள்ளலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி. வி சானக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். கடந்த கால அரசாங்கங்கள் மற்றும் ராஜபக்ஷர்கள் தொடர்பிலும் ஜனாதிபதி பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் அதேபோல் குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் நிரூபிக்கவும் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை கொண்டு அரசியல் ஸ்திரத்தன்மையை தீர்மானிக்க முடியாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துடன் பாராளுமன்றத்துக்கு வந்து ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 3 பாராளுமன்ற ஆசனங்களை வைத்துக் கொண்டு தான் ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்றார். 3 இலக்கம் அதிஷ்டமானது. பொதுஜன பெரமுனவுக்கு மூன்று ஆசனங்களை பெற்றுக் கொண்டுள்ளது.

2029 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக பொதுஜன பெரமுன எழுச்சி பெறும். நாட்டின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிப்போம். மக்கள் விடுதலை முன்னணியை போன்று அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் எதிர்க்கும் எதிர்க்கட்சியாக செயற்படப் போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பிச் சென்று ஏமாற்றமடைந்து அரசியலில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளவர்கள் மீண்டும் எம்முடன் கொள்கை அடிப்படையில் இணைந்துக் கொள்ளலாம். வெறுப்புக்களை முன்னிலைப் படுத்தி செயற்பட போவதில்லை -என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதை விற்றவர் கைது

**ஒரு மாதத்தில் 2ஆவது தடவை சிக்கினார்**



கல்முனை, நவ. 21

**பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்களை வியா பாரம் செய்து வந்த நபரை இம் மாதத்தில் இரண்டாவது தடவையாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.**

நேற்று அதிகாலை கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற் கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குறித்த நபர் ஒரு கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.


அத்துடன் குறித்த சந்தேக நபர் ஏற்கனவே கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் மற்றுமொருவருடன் கல்முனை கடற்கரை பள்ளி வீதியில் வைத்து கல்முனை விசேட அதிரடிப் படையின ரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதான நபர் கல்முனையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் கடந்த 11 ஆம் திகதி ஐஸ் போதையுடன் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்தவர் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று மீண்டும் கைதான நபரை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த விசேட அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப் பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஆர். ஏ. டி. சி.எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)

# 150 லீற்றர் கசிப்புடன் 30 பேர் காத்தான்குடியில் கைதாகினர்



காத்தான்குடி, நவ. 21

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் 150 லீற்றர் கசிப்புடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள், கசிப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன பொலிஸாரால் சுற்றிவ ளைக்கப்பட்டன.

மறைத்து வைக்கப்பட்ட நிலையிலும், விற்பனை செய்யப்பட்ட நிலையிலும் சுமார் 150 லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பெருமளவிலான உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

# கல்வி வெளியீட்டுத் திணைக்கள மேலதிக ஆணையாளராக சுஜாதா

மட்டக்களப்பு, நவ. 21

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திரகுமார் இலங்கை கல்வி நிர்வாக சேவை விசேட தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தமது கடமையை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பொறுப் பேற்றுக் கொண்டார்.

இதனால் மட்டக்களப்பு வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும், கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் ஏற்பட்டுள்ளது. (எ)

# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்!



திருகோணமலை, நவ. 21

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமா னது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியா ராச்சி தலைமையில் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற் றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப் பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப் பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுரைக்கிணங்க இம்முறை விவசாய அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்னைகள் மற்றும் கருத்துகள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் பெறப்பட்டன. இந்தக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சு தாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப் பாளர் கே. சுப்பிரமணி யம், மாவட்ட செயலக விவசா யப் பணிப்பாளர் ரி. கருணை நாதன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

# மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு அரசு நிச்சயம் இடமளிக்கும்

**மாவீரர் பணிக்குழு நம்பிக்கை**

கல்முனை, நவ. 21

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லமான கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கு ஆளும் அநுர அரசு நிச்சயமாக இடமளிக்குமென நம்புகிறோம்- இவ்வாறு அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழுவின் தலைவர் சி. சுப்பிரமணியம், செயலாளர் நா. கிருஷ்ணபிள்ளை( குட்டி மணி மாஸ்டர்) ஆகியோர் இணைந்து தெரிவித்தனர்.

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நடத்துவது தொடர்பில் பாண்டிருப்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழுவில் 12 உறுப்பினர்கள் இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் பல தடைகளுக்கு மத்தியில் நடத்தி வந்தோம்.

அந்த வேளையில் சில அரசியல்வாதிகள் அழையாமல் வந்து இந்த நிகழ்வை நாங்கள் தான் செய்கிறோம் என்று தம்பட்டம் அடிப்பார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கட்சியினர் கஞ்சி குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தை வந்தடைந்து இதனை செய்வார்கள்.

கடந்த வருடம் ஒரு நபரை வைத்து இந்த மாவீரர் துயிலுமில்ல நினைவேந்தலை குழப்பினர்.

அதனால் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகளை செய்வதற்கு சிரமதானம் செய்து ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றோம்.


எனவே, அரசியல் [illegible] வந்து பொய்யான பிரசாரங்கள் செய்வதை முழுமையாக நிறுத்த வேண்டும்.

கார்த்திகை மாதம் என்றாலே எங்களுக்கு ஞாபகம் வருவது 27ஆம் திகதியாகும். இது எக்காலத்திலும் எத்தனை தலைமுறைகள் வந்து போனா லும் எத்தனை மாதங்கள் நாங்கள் கடந்து சென்றாலும் எங்களது நெஞ் சில் ஆறாத வடுவாக எங்களது உள்ளத்தை போட்டு குடைந்து கொண்டு வருத்திக் கொண்டு எங்களை தினம் தினம் வேத னைப்படுத்தி கொண்டு ஞாப கப்படுத்திக் கொண்டிருக்கும் விடயம் .எங்களது மாவீரர்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்களது மண்ணுக்காக தமிழினத்துக்காக ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை எங்களது அண்ணனாக தம்பியாக சகோதரிகளாக நாங்கள் இழந்திருக்கின்றோம்.

இந்த மண்ணுக்கு விதையாகி இருக்கின்றார்கள். ஆகவே இந்த மாவீரர் தின மானது ஒரு எழுச்சி நாளாக இருக்க வேண்டும் என் றனர். (எ)

# மாணவனுக்கு வெண்கலப் பதக்கம்




நிந்தவூர், நவ. 21

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட சேர். ஜோன் ரபட் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் - 2024 விளையாட்டுப் போட்டி மாத் தறை கொடவில விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை சார்பில் பங்கேற்ற 12 வயதுப் பிரிவைச் சேர்ந்த முஹம்மட் ஹாரிஸ் முஹம்மத் ஹின்ஸான் 80 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண் கலப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்ய படைகளுக்கு புடின் அனுமதி

## மேலும் தீவிரமடையும் ரஷ்யா - உக்ரைன் போர்

மொஸ்கோ, நவ. 21

**1000 நாட்களுக்கு மேலாக நீடித்து வரும் உக்ரைன் மீதான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த படைகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுமதி வழங்கியுள்ளார். இதனால் போர் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.**


இந்த போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கையில் புடின் கையெழுத்திட்டுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையில் கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடங்கியது. இந்த போர் தொடங்கி 1,000 நாட்கள் நிறைவடைந்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். நாட்டின் அடிப்படை உட்கட்டமைப்பு தகர்ந்துள்ளது.

இதனிடையே, ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் இராணுவ உதவி வழங்கி வந்தன. நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது. எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

தற்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலம் முடிவடையவுள்ளது. இந்த நிலையில், நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார். இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில் ரஷ்யாவுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். இந்தச் சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது.

இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது. இதன்படி, அணு ஆயுதம் இல்லாத நாடு (உக்ரைன்), அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் (அமெரிக்கா) கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர் தாக்குதல் மேற்கொண்டால், பதிலுக்கு அந்த நாட்டின் மீது ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உட்பட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது. இது தொடர்பான ஆவணங்களில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கையெழுத்திட்டுள்ளார். (எ)



ஜி 20 நாடுகள் இடையே உறவை வலுப்படுத்த

# உலகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை


ரியோ டி ஜெனிரோ, நவ. 21

ஜி 20 மாநாட்டின் இடையே இத்தாலி, இந்தோனேசியா, நோர்வே, போர்த்துக்கல், எகிப்து மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியைச் சந்தித்து, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உறவுகளை ஆழப்படுத்துவது குறித்து ஆராய்ந்தார்.

"ரியோ டி ஜெனிரோ ஜி 20 உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியை சந்தித்ததில் மகிழ்ச்சி. பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உறவுகளை ஆழப்படுத்துவதை மையமாக வைத்து எங்களது பேச்சுகள் அமைந்தன. கலாசாரம், கல்வி மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றியும் நாங்கள் பேசினோம். இந்தியா - இத்தாலி நட்புறவு ஒரு சிறந்த உலகிற்கு பெரிதும் பங்களிக்கும்" என்று மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ)



# அமெரிக்க ஏவுகணைகளை வீசி ரஷ்யாமீது உக்ரைன் தாக்குதல்

மொஸ்கோ, நவ. 21

நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்திக் கொள்ள உக்ரைனுக்கு ஜோ பைடன் நிர்வாகம் அனுமதி வழங்கியதையடுத்து, ஆறு ஏவுகணைகளை வீசி உக்ரைன் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யாவின் ப்ரையான்ஸ்க் பகுதியில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணை வீசி உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆறு ஏவுகணைகளையும் ரஷ்ய இராணுவம் தாக்கி வீழ்த்தியதாகவும், வானில் வெடித்துச் சிதறிய ஏவுகணைகள் இராணுவ முகாம்கள் அருகே விழுந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இதனால் பெரும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

ப்ரையான்ஸ்க் பகுதியில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்தாலும் எந்தவிதமான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. குறிவைக்கப்பட்ட பகுதியில் சில வெடிப்புகள் நிகழ்ந்ததாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

# ஆயுத கும்பலை சேர்ந்த 28 பேர் உயிரிழந்தனர்!

## பொலிஸார் திடீர் தாக்குதல்

போர்ட்-ஓ-பிரின்ஸ், நவ. 21

ஹைதி நாட்டில் பொலிஸார் நடத்திய அதிரடி தாக்குதலில் ஆயுதக் கும்பலைச் சேர்ந்த 28 பேர் உயிரிழந்தனர்.

கரீபியன் தீவு நாடான ஹைதியில் 2021ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து, அந்த நாட்டில் அரசியல் நிலைத்தன்மையின்றி ஆயுத கும்பல்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

மேலும் தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸ் உள்ளிட்ட பல இடங்களை ஆயுத கும்பல் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில், அந்த நாட்டின் தலைநகர் அருகே பெடன் வெலி பகுதியில் பொலிஸாருக்கும் ஆயுதக் கும்பலுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இந்த மோதலில் ஆயுதக்குழுவைச் சேர்ந்த 28 பேர் உயிரிழந்தனர். (எ)

# ரஷ்யாவை எதிர்கொள்ள உக்ரைனுக்கு மேலும் பெருந்தொகை ஆயுத உதவிகள்

## அமெரிக்கா அதிரடி அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 21

உக்ரைனுக்கு மேலும் 275 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத உதவிகள் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 1002வது நாளாக நீடித்து வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்துவரும் நிலையில் அமைதி பேச்சுக்கு இரு நாடுகளும் உடன்படாததால் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு மேலும் 275 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான ஆயுத உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதில் இராணுவ ராங்கிகள், ஏவுகணைகள் உட்பட அதிநவீன ஆயுதங்களும் அடங்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதன் மூலம் ரஷ்யாவுடனான போர் தொடங்கியது முதல் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுத உதவி 51 பில்லியன் டொலரை எட்டியுள்ளது. (எ)

# துணை இராணுவத்துடன் இராணுவம் நேரடி மோதல்

கார்டூம், நவ. 21

சூடான் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் துணை இராணுவப் படையினர் 150 பேர் பலியாகினர்.

சூடானில் கடந்த 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை இராணுவப் படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை இராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை இராணுவப் படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்கும் இடையே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மோதல் வெடித்தது. துணை இராணுவத்தின் அதிவிரைவு ஆதரவு படையினர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியும் கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அந்த நாட்டின் தலைநகர் தெற்கு டார்ப் மாகாணம் அல் பஷீர் நகரில் இராணுவத்துக்கும் துணை இராணுவத்தின் அதிவிரைவுப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்த மோதலில் துணை இராணுவத்தின் அதிவிரைவுப் படையினர் 150 பேர் உயிரிழந்தனர்.

சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி போட்டி கைவிடப்பட்டது இலங்கை வசம் ஒருநாள் தொடர்

பல்லேகல, நவ. 21

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கடைசி ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இந்த நிலையில் முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை சுவீகரித்தது.

கண்டி, பல்லேகலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 3ஆவதும் கடைசியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி 21 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மழையால் கைவிடப்பட்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த நியூசிலாந்து 21 ஓவர்களில் ஒரு விக்கெட் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிற்பகல் 4 மணியளவில் கடும் மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

வில் யங் 56 ஓட்டங்களுடனும் ஹென்றி நிக்கோலஸ் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

9 ஓட்டங்களுடன் ரிம் ரொபின்சனை ஆட்டமிழக்கச் செய்த மொஹமத் ஷிராஸ், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தனது முதலாவது விக்கெட்டைக் கைப்பற்றினார்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்களின் பின்னர் மழை விட்டதால், ஆடுகளமும் மைதானமும் மாலை 6.00 மணியளவில் பரீச்சிக்கப்படும் என மாலை 5.30 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், அந்த அறிவிப்பு விடுக்கப்பட்ட சற்று நேரத்தில் மீண்டும் மழை பெய்ததால் ஆடுகள பரிசீலனை கைவிடப்பட்டது.

இரவு 7.30 மணியளவில் மழை ஓய்ந்தபோதிலும் அடுத்த பத்தாவது நிமிடத்தில் மீண்டும் கடும் மழை




பெய்யத் தொடங்கியது. இதனையடுத்து இரவு 7. 53 மணிக்கு போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, முதல் இரண்டு போட்டிகளில் விளையாடிய குசல் மெண்டிஸ், பதும் நிஸ்ஸங்க, கமிந்து மெண்டிஸ், அஷித்த பெர்னாண்டோ ஆகிய நால்வருக்கும் கடைசி போட்டியில் ஓய்வு வழங்கப்பட்டது.


தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள அவர்கள் நால்வருக்கும் போதிய ஓய்வு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் துனித் வெல்லாலகேயும் இப் போட்டியில் விளையாடவில்லை.இந்த ஐவருக்குப் பதிலாக நிஷான் மதுஷ்க, நுவனிது பெர்னாண்டோ, மொஹமத் ஷிராஸ், அறிமுக வீரர் சமிந்து விக்கிரமசிங்க, ஜொனித் லியனகே ஆகியோர் அணியில் இடம்பிடித்தனர்.

ஆனால், மழை காரணமாக அவர்களால் முழு போட்டியை அனுபவிக்க முடியாமல் போனது.

மூன்றாவது போட்டி கைவிடப்பட்ட நிலையில் தொடர்நாயகன் விருது குசல் மெண்டிஸுக்கு வழங்கப்பட்டது. (எ)

## ஆசிய சம்பியன்ஸ் கிண்ண இறுதி போட்டியில் இந்தியா



புதுடில்லி, நவ. 21

மகளிர் ஆசிய சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவின் பீஹார் மாநிலம் ராஜ்கிர் பகுதியில் நடைபெற்று வருகிறது.

இதன் அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இந்திய அணி, ஜப்பானுடன் நேற்று முன்தினம் மோதியது. இதில் இந்திய அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்திய அணி தரப்பில் 48ஆவது நிமிடத்தில் நவ்னீத் கவுர் கோல் அடித்தார்.

தொடர்ந்து 56ஆவது நிமிடத்தில் லால்ரெம்சியாமி பீல்ட் கோல் அடித்து அசத்தினார். இந்த ஆட்டத்தில் இந்திய அணி வீராங்கனைகள் கோல் அடிக்க கிடைத்த பல்வேறு வாய்ப்புகளை வீணடித்தனர். இருப்பினும் இந்த வெற்றி மூலம் இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, அரையிறுதி ஆட்டத்தில் 3 - 1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்திய சீனா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (எ)

## தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட 17 வீரர்களைக் கொண்ட இலங்கை டெஸ்ட் குழாத்தில் துடுப்பாட்ட வீரர் ஓஷத பெர்னாண்டோ, சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பிரகாசிக்கத் தவறிய ரமேஷ் மெண்டிஸ் நீக்கப்பட்டுள்ளார்.

அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா உட்பட 10 வீரர்கள் ஏற்கனவே தென்னாபிரிக்கா சென்று அங்கு நீல் மெக்கென்ஸியின் கீழ் விசேட பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எஞ்சிய 7 வீரர்கள் நாளை வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்காவுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளனர். முதலாவது போட்டி டேர்பன், கிங்ஸ்மீட் மைதானத்தில் நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 2ஆவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி கெபெர்ஹா, சென். ஜோர்ஜஸ் பார்க் அரங்கில் டிசெம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.இந்தப் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை அணியினர் வருமாறு,

தனஞ்சய டி சில்வா (தலைவர்), பதும் நிஸ்ஸங்க, திமுத் கருணாரட்ன, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், ஓஷத பெர்னாண்டோ, சதீர சமரவிக்கிரம, பிரபாத் ஜெயசூரிய, நிஷான் பீரிஸ், லசித் எம்புல்தெனிய, மிலன் ரத்நாயக்க, அஷித்த பெர்னாண்டோ, விஷ்வா பெர்னாண்டோ, லஹிரு குமார, கசுன் ராஜித. (எ)

# இந்திய அணியிலிருந்து ஷபாலி வர்மா நீக்கம்

புதுடில்லி, நவ. 21

இந்திய அணியிலிருந்து ஷபாலி வர்மா நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி எதிர்வரும் டிசெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடவுள்ளது.

இந்த தொடர் ஐ. சி. சி. மகளிர் சம்பியன்ஷிப்பின் ஓர் அங்கமாகவுள்ளது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய தொடருக்கான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டது. இதில் தொடக்க வீராங்கனையான ஷபாலி வர்மா நீக்கப்பட்டுள்ளார்.

இவர் கடைசியாக விளையாடிய 6 போட்டிகளில் 108 ஓட்டங்களே எடுத்துள்ளார். கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் ஷபாலி வர்மா 77 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். அதன் பின்னர் அவர், பேர்கொண்டு ஒரு அரைச் சதம் கூட அடிக்கவில்லை. இந்தியா - அவுஸ்திரேலியா மகளிர் அணிகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி வரும் டிசெம்பர் 5ஆம் திகதி பிரிஸ்பனில் நடைபெறுகிறது. 2ஆவது போட்டியும் அங்கேயே



நடத்தப்படுகிறது. கடைசி மற்றும் 3ஆவது போட்டி டிசெம்பர் 11ஆம் திகதி பெர்த் நகரில் நடைபெறுகிறது.

இந்திய அணி விவரம் வருமாறு, ஹர்மன்பிரீத் கவுர் (தலைவி), ஸ்மிருதி மந்தனா, பிரியா பூனியா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஹர்லீன் தியோல், யாஸ்திகா பாட்டியா, ரிச்சா கோஷ், தேஜல் ஹசாப்னிஸ், தீப்தி ஷர்மா, மின்னு மணி, பிரியா மிஸ்ரா, ராதா யாதவ், டைட்டாஸ் சாது, அருந்ததி ரெட்டி, ரேணுகா சிங் தாக்கூர், சைமா தாகூர். (எ)

# சாதனை நாயகன் நடால் ஓய்வு

மட்ரிட், நவ. 21

ரென்னிஸ் ஜாம்பவான் ரபேல் நடால் அனைத்து வகையான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளார். டேவிஸ் கிண்ண தொடருடன் ரென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நடால் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், டேவிஸ் கிண்ண தொடரில் நெதர்லாந்துக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் தோல்வி கண்டது. இதில் ஒற்றையர் பிரிவில் தனது கடைசி போட்டியில் விளையாடிய ரபேல் நடாலும் தோல்வியைத் தழுவினார். 2 - 1 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி நெதர்லாந்து அரையிறுதிக்கு முன்னேறியது.

இதையடுத்து ரபேல் நடால் ரென்னிஸ் போட்டிகளில் இருந்து விடைபெற்றார். "என் வாழ்வின் முதல் போட்டியிலும் தோல்வி கண்டேன். தற்போது கடைசி போட்டியிலும் தோல்வி கண்டுள்ளேன். என் விளையாட்டு வாழ்வின் வட்டம் பூரணமடைந்திருக்கிறது" என நடால் கூறினார்.

கடந்த 20 ஆண்டுகள் சர்வதேச ரென்னிஸில் தனக்



கென தனி இடத்தை பிடித்த ரபேல் நடால் 14 முறை பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் பட்டத்தை வென்று வரலாறு படைத்துள்ளார்.

மேலும், 63 ரென்னிஸ் தொடர்களில் சம்பியன் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை நடால் படைத்துள்ளார். 38 வயதான ரபேல் நடால் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் ... (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்ஜென்ரீனா வெற்றி

பியூனஸ் அயர்ஸில், நவ. 21

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்று போட்டியில் பெருவை வீழ்த்தி ஆர்ஜென்ரீனா வெற்றி பெற்றது.

23ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி 2026ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய 3 நாடுகளில் நடைபெறவுள்ளது. இதில் 48 நாடுகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் நாடுகளை தவிர மற்ற அணிகள் தகுதி சுற்று மூலமே தெரிவு செய்யப்படும். தகுதி சுற்று பல்வேறு நாடுகளில் நடக்கின்றன.

இதில் தென் அமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் நேற்று நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா - பெரு அணிகள் மோதின. இதில் ஆர்ஜென்ரீனா 1 - 0 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பிரேசில் - உருகுவே அணிகள் சமனில் முடிந்தது. இந்த ஆட்டம் 1 - 1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. இதே போன்று பொலிவியா - பராகுவே ஆட்டமும் 2 - 2 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. (எ)

## 26ஆம் திகதி...

அவர் மேலும் தெரிவிக்கையில், இது எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று ஆழ்ந்த காற்றமுக்கத் தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும் அதேவேளை 26 ஆம் திகதி தீவிர காற்றமுக்கத் தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும் என எதிர்பார்க் கப்படுகிறது. தற்போதைய நிலையின் படி இது ஒரு புயலாக மாற்றம் பெறும் வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலையின் படி இதன் நகர்வு பாதை கிழக்கு மாகாணத்திற்கு அருகாக நகர்ந்து, பின்னர் வடக்கு மாகாணத்தை அண்மித்து (தற்போதுள்ள நிலையில் இது கரையைக் கடக்கும் போது இதன் உள் வளையத்திற்குள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களும், வெளி வளையத்துக் குள், முல்லைத்தீவு, மன் னார், வவுனியா மாவட்டங்களும் அடங்குகின்றன) தமிழ்நாட்டின் கடலூர் புதுச்சேரிக் கிடை யில் கரையைக் கடக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக் கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் மிக மிக கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 26 மற்றும் 27 ஆம் திகதிகளை உள்ளடக்கிய 48 மணி நேரத் தில் 350 மி. மீ.ஐ விட கூடுதலாக மழைவீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் பல பகுதிகளிலும் தற்போது கிடைத்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது.

சில பகுதிகளில் வெள்ள அனர்த்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. எனவே கிடைக்கவுள்ள கனமழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளதனால் தாழ் வான பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

விவசாயிகளும் இக்கனமழையை கருத்தில் கொண்டு தங்களுடைய விவசாய நடவடிக்கைகளில் குறிப்பாக நெற் செய்கை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

எதிர்வரும் 26 மற்றும் 27ம் திகதிக ளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 60 தொடக்கம் 80 கி.மீ. வரை யான வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் உள் நிலப்பகுதிகளில் காற்று 50 தொடக்கம் 70 கி.மீ. வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

எனவே கடுமையான காற்று வேகத்தி னால் பாதிக்கப்படக் கூடிய மரங்கள் மற்றும் பழைய கட்டிடங்கள் தொடர் பில் அவதானமாக இருப்பது அவசியம்.

இதன் காரணமாக எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு மற்றும் தெற்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

இத்தாழமுக்கம் புயலாக மாறாது விட்டாலும் மேலுள்ள அதி தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் கடற் கொந்தளிப்பான நிலைமைகள் நிகழும்.

எனவே முன்கூட்டிய பாதுகாப்பு தயார்ப்படுத்தல் முறைமைகளைப் பின்பற்றுவது எமக்கு ஏற்படும் பாதிப் புக்களை கணிசமாகக் குறைக்கும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் நிர்வாக அதிகாரிகள் இந்த தாழமுக்கம்/புயல் தொடர்பாக அவதா னம் செலுத்துவது சிறந்தது - என்றார். (அ)

## மன்னாரில்...

தாயின் உறவினர்கள் குற்றம் சாட்டியிருந் தனர்.

எனவே இது தொடர்பில் சுகாதார அமைச்சு உரிய விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாக அமைச்சர் நலிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

## படைமுகாம்களை...

தரப்பினருடன் கலந்தாலோசனை களை மேற்கொள்ளவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை 30 வருடங்களாக பயங் கரவாதத் திற்கு எதிராக போரிட்டது. ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப் பட்ட நிலையில் இன்று அனைத்து சமூகத்தினரும் சுதந்திரத்தை அனுபவிக் கின்றனர் என குறிப்பிட்டுள்ள அவர், வடக்கு - தெற்கு என எந்த பகுதியாகயி ருந்தாலும் பாதுகாப்பை உறுதி செய் வது அவசியம் என கூறியுள்ளார். (அ)

## இந்தியா...

விரிவுரை ஒன்றில் கலந்து கொள்வ தற்காக அவர் அங்கு செல்கின்றார்

குறித்த விரிவுரை நாளை மாலை 06.00 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன் முன்னாள் ஜனாதிபதி எதிர்வரும் 30ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (அ)

## ஹரீன்...

ஹரீன் பெர்னாண்டோ மற்றும் அவரது ஆதரவாளர்கள் பதுளை நகரில் '10' ஆம் இலக்கம் கொண்ட சட்டை களை அணிந்து கொண்டு நடமாடிய தால் பொலிஸாருடன் முறுகல்நிலை ஏற்பட்டது.

அவர் பாராளுமன்ற தேர்தலில் பதுளை மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் 10ஆம் இலக்கத்தில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (அ)

## சிங்களவர்...

அநீதியான விமர்சனமாகும். எங்களுக்கு கிடைத்திருக்கின்ற மக்கள் ஆணைக்கு செய்யப்படுகின்ற அவமான மாகும். 76 வருடங்களின் பின்னர் ஒரு அரசாங்கத்துக்கு சகல இனங்களும் ஆணை வழங்கியுள்ளமை இதுவே முதல் தடவையாகும். மத, இன, கலாசார வேறுபாடுகளை மறந்து சகலரும் ஆதர வுகளை வழங்கியுள்ளனர். நாங்கள் சம்மாந்துறை, கல்முனை மற்றும் வடக்கை முழுமையாக வெற்றி கொண்டுள்ளோம். நுவரெலியாவில் வெற்றி பெற்றுள்ளோம். எந்த ஓர் இனத் தையும் நாம் புறக்கணிக்கும் வகையில் செயற்படமாட்டோம் என்பதை மிக உறுதியாக கூறுகிறோம். இது எமது கொள்கையில் இல்லை. இதற்கு முன்னர் இருக்கவும் இல்லை. மாத்தறை மாவட்ட மக்கள் முஸ்லிம் உறுப்பினரை தெரிவு செய்துள்ளனர். குருநாகல் மாவட்ட மக்கள் முதல் தடவையாக முஸ்லிம் உறுப்பினரை தெரிவு செய்துள் ளனர். கம்பஹா மாவட்டத்திலும் இது நடந்துள்ளது. கண்டி மாவட்டத்திலும் முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட் டத்தில் கல்முனை, சம்மாந்துறை மக்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர். அங்கு நாங்கள் நான்கு உறுப்பினர்களைப் பெற்றோம். அதில் முஸ்லிம் பிரதிநிதி கள் இருக்கவில்லை. நாங்கள் அந்த கோணத்தில் சிந்திக்கவில்லை. ஆனால் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அபூபக்கர் ஆதம்பாவாவை தேசிய பட்டியலில் தெரிவு செய்துள்ளோம். 21 ஆம் திகதி பாராளுமன்றம் ஆரம்பமா கும். அதில் நீங்கள் பல ஆரோக்கியமான நிலைமைகளை பார்ப்பீர்கள். இது இலங்கை அரசாங்கம். இது சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசாங்கம் அல்ல. இது தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் என் றார். (அ)

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கு நேற்று 12 மில்லியன் ரூபா நிதி உதவி!

## சீனத் தூதுவரால் வடக்கு ஆளுநரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாண மக்களின் வாழ்வா தார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சீன அரசாங்கத்தால் 12 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாய கனிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் நேற்று புதன்கிழமை கையளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகனை, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று காலை இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழு வினர் சந்தித்தனர். இதன்போதே அவர் இந்தக் காசோலையைக் கையளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக நிய மிக்கப்பட்ட நாகலிங்கம் வேதநாயக னுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்க ளையும் தெரிவித்த இலங்கைக்கான சீனத்தூதுவர், இந்தப் பிரதேசத்தின் அபி விருத்திக்கு தமது பங்களிப்பு இருக்கும் என்று உறுதியளித்தார். வடபகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்கை யில் சந்தோசமாக இருப்பதாக சீனத் தூ துவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரை வர வேற்ற வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் ஊழல் ஒழிப்பு, அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக் கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

வடபகுதி விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்னையாக அவர்களின் உற்பத் திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற் குரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டினார். மேலும், வடக்கு மாகாணத்தின் மற் றொரு முக்கிய வளமான மீன்பிடி மூல மாக பிடிக்கப்படும் மீன்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படு கின்றன எனவும் அவை உற்பத்திப் பொருள்களாக ஏற்று மதி செய்யப்பட வேண்டியதன் அவசி யத்தையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்துக்கு சீன அரசாங் கம் தொடர்ச்சியாக உதவிகளைச் செய்யும் என்பதைக் குறிப்பிட்ட சீனத் தூதுவர், வடக்கு மாகாண மக்களின் மிக வும் அன்பாக வரவேற்பு உபசரிப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் தெரி வித்தார். மேலும், சீனாவில் 800 மில்லி யன் மக்களின் வறுமையை கடந்த தசாப்த காலத்தில் இல்லாதொழித்ததா கவும் அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார். (அ)

### மன்னார் தாய், சிசு மரணம்

# நீதி வழங்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தால் பதற்றம்!

மன்னார், நவ. 21

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் உயிரிழந்த ராஜஸ்ரீனன்ற பெண்ணின் மரணத்துக்கு நீதி கோரி குறித்த வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மாலை பாரிய ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், குறித்த பெண்ணின் மரணத்தின்போது, கடமையிலிருந்த வைத்தியர்கள் உள்ளிட்ட பணிக்குழா மினர் பதவி விலகக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள வர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன் காரணமாகக் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் நிலவியதால் பொலி ஸாரும், கலகமடக்கும் அதிகாரிகளும் கள மிறக்கப்பட்டனர்.

இந்நிலையில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நேற்று மாலை பிரவேசித்த மாவட்ட அரசாங்க அதிபர் வைத்தியசாலை நிர்வாகத்தினரி டமும், உயிரிழந்த பெண்ணின் உறவி னர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார்.

பிரசவத்துக்காக நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட மன்னார் - பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான ராஜஸ்ரீ என்ற பெண் உயிரி ழந்ததுடன், அவரால் பிரசவிக் கப்பட்ட சிசுவும் உயிரிழந்தது.

இந்நிலையில், வைத்தியர்களின் கவன யீனம் காரணமாகவே தாயும் சிசுவும் மர ணித்ததாகக் குறித்த பெண்ணின் உறவி னர்கள் வைத்தியசாலையில் மகப்பேறு விடுதிக்கு முன்பாக போராட்டம் நடத் திய நிலையில் அங்குப் பதற்றம் நிலவி யிருந்தது.

பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (அ)

## 10ஆவது...

உறுப்பினர்களின் வாகனங்கள் பொலிஸ ாரால் அவற்றுக்காக ஒதுக்கப் பட்டுள்ள நிறுத்தலிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களின் கூடங்களில் நுழைவதுடன் வாக்க ழைப்பு மணியோசை அடிக்கும்வரை அங்கு தங்கியிருத்தல் வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ)

## முல்லைத்தீவில்...

குளம் ஐந்தாவது மைல் கல் பகுதியில் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததோடு ஒருவர் படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

குறித்த விபத்து சம்பவத்தில் மாங்குளம் பகுதியில் வசிக்கும் 20 வயதான விஜயகுமார் விதுசன் மற்றும் 23 வயதான ஜெயகுமார் விதுசன் ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந் துள்ளனர்.

அதேவேளை, 31 வயதான மற்றுமொரு இளைஞர் படுகாய மடைந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் தொடர் பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்தியாவுடன்...

மக்களின் பரஸ்பர நன்மைகளை வலுப்படுத்துவதற்காகவும், இந்தியாவு டன் இணைந்து செயற்படுவதற்கான உறுதிப்பாட்டை மீள வலியுறுத்து கின்றேன் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பலாலி...

அம்மன் ஆலயம் உட்பட 6 ஆலயங்க ளுக்கு வெள்ளிக்கிழமைகளில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முதல் பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு, மக்கள் தினந்தோறும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயம் செல்வதற்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பாதை ஊடாக, மக்கள் பயணத்தை மேற்கொள்ள முடி யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உயரதிகாரிகளுக்கு நீதிமன்று அழைப்பு

## பல கோடி ரூபா மோசடி என குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 21

**மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உட்பட 8 பேரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே அறிவித்துள்ளார்.**

இலங்கை சுங்கத்தினால் அனுமதி பெறப்படாத சுமார் 400 சொகுசு கார்கள் போலியான முறையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரசாங்கத்திற்கு 500 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை சுங்கத்தால் அனுமதிக்கப்படாத சொகுசு மொண்டெரோ ஜீப்கள், லாண்ட் க்ரஷர் ரக கார்கள் உட்பட 400 கார்கள் மட்டுமே சுங்கத்தின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இலங்கை சுங்கத்தால் அனுமதி பெறாத வாகனங்களை போலியான முறையில் பதிவு செய்து, அரசாங்கத்திற்கு வரி வருமானம் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல முக்கிய உண்மைகள் வெளியாகியுள்ளன என புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பிரதம நீதவான் உத்தரவிட்டார்.

# பிரதியமைச்சர்கள் இன்று பதவியேற்பு!

கொழும்பு, நவ. 21

பிரதி அமைச்சர்கள் நியமனம் இன்று மாலை இடம்பெறவுள்ளது என தெரியவருகின்றது.

இன்று காலை பாராளுமன்றம் கூடி ஆரம்ப நாளுக்குரிய விடயதானங்கள் நிறைவடைந்த பின்னர், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையுடன் சபை ஒத்திவைக்கப்படும்.

அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் மாலை பிரதி அமைச்சர்கள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர். 25 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என தெரியவருகின்றது. (அ)

# 13 வருடங்களின் முன் நடைபெற்ற கடத்தல்!

## கடற்படை கப்டன் கைது

கொழும்பு, நவ. 21

13 வருடங்களுக்கு முன்னர் நடந்ததாகக் கூறப்படும் கடத்தல், சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை மற்றும் பலவந்தமாக காணாமல் போனமை தொடர்பான விசாரணை தொடர்பில் கடற்படைத் தலைமையகத்தில் கடமையாற்றும் கப்டன் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் நவம்பர் 18ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கிரியுல்ல மற்றும் மஹரகம பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவராவார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் கூற்றுப்படி, 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில், கடுபொத, வஜிரவத்தையைச் சேர்ந்த கணேரலாலாகே சாந்த சமரவீர என்ற நபர் ஒருவர் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு காணாமல் போனார்.

இவ்வழக்கில் இதற்கு முன்னர் அளவ்வ பொலிஸ் நிலையத்தில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி, அளவ்வ பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் அப்போதைய பிரதம பொலிஸ் பரிசோதகர் மீரிகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியபோது கைது செய்யப்பட்டார். அதனையடுத்து, இந்த வருடம் ஜூன் மாதம் 4 ஆம் திகதி, சம்பவத்தின்போது அளவ்வ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு சார்ஜன்ட்களும் கைது செய்யப்பட்டனர். மூவரும் தற்போது பிணையில் உள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விரிவான விசாரணைகள் இருந்தபோதிலும், காணாமல்போன நபரின் கதி என்னவென்று தெரியவில்லை. (அ)

மன்னார் வைத்தியசாலையில்

# உயிரிழந்த தாய், குழந்தையின் உடல்கள் பரிசோதனைக்கு யாழ்ப்பாணம் வந்தன!

மன்னார், நவ. 21

மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்றைய தினம் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த இளம் தாய் மற்றும் குழந்தையின் சடலங்கள் மேலதிக பிரேத பரிசோதனைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் இரவு அனுப்பி வைக்கப்பட்டன.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வயதான இளம் தாய் ஜெகன் ராஜசிறி திருமணமாகி 10 வருடங்கள் பிள்ளை இல்லாத நிலையில், நேற்று முன் தினம் பிரசவத்திற்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்டார். பிரசவத்தின்போது தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்து நேற்று முன் தினம் மகப்பேற்று விடுதியில் போராட்டம் நடத்தியதால் வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், வைத்தியசாலைக்கு வருகை தந்த மன்னார் நீதவான் உயிரிழந்த தாய் மற்றும் குழந்தையின் சடலங்களை பார்வையிட்டு, பிரதே பரிசோதனைக்கா கவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

நீதவானின் உத்தரவிற்கு அமைய சடலங்கள் நேற்று முன் தினம் இரவு யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் சகல சிறப்புரிமைகளும் இரத்து!

## ஐக்கிய மக்கள் சக்தி யோசனை

கொழும்பு, நவ. 21

பாராளுமன்ற உறுப்பினர்களின் சகல சிறப்புரிமைகளையும் ரத்து செய்ய யோசனை முன்வைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்றில் தனிப்பட்ட பிரேரணையாக தாம் இந்த யோசனையை முன்வைக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் காலை மற்றும் பகலூணவு முழுமையாக நிறுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளங்கள் ரத்து செய்யப்பட்டு இந்த சேவையை ஓர் கௌரவ சேவையாக அறிவிக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் வழங்கப்படும் 10 மில்லியன் ரூபா கடன் இனி வழங்கப்படக்கூடாது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பு நீக்கப்படவேண்டும்.

அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கினால் வாடகை அடிப்படையில் வழங்கவேண்டும். அந்த வாடகைத் தொகை மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டும். காரியாலயங்களுக்காக வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா தேவையில்லை.

மாதிவெல பகுதியில் காணப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்படவேண்டும்.

ஓய்வூதியத்தை இரத்து செய்யவும். எம்.பி.க்களின் பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி தொகையையும் ரத்து செய்ய வேண்டும்-என்றார். (அ)

# தெஹிவளை துப்பாக்கிச் சூடு சந்தேக நபர்கள் இருவர் கைது!

கொழும்பு, நவ. 21

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கொலைசம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் களுபோவிலவிலிருந்து தெஹிவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்ற சம்பவமொன்று கடந்த செப்ரெம்பர் மாதம்20 ஆம் திகதி பதிவாகியிருந்தது.

இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்திருந்தனர். இந்நிலையில் குறித்த சம்வத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திய மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய சந்தேக நபர்கள் இருவரும் கடந்த திங்கட்கிழமை ஹோமாகம இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று தெஹிவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 27 மற்றும் 30 வயதுடைய அத்துருகிரிய மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

# பானதுகம பகுதியில் சிறு வெள்ள அபாயம்

கொழும்பு, நவ. 21

நில்வள கங்கையின் நீரேந்து பகுதிகளில் பெய்த மழையால், பானதுகம பகுதியில் சிறு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

பானதுகம நீர்மானியின் நீர்மட்டம் நேற்று காலை 6.1 அலகாக பதிவாகியிருந்ததுடன், குறித்த பகுதியில் பல தாழ்நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நில்வள கங்கையின் நீர்மட்டம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

கனமழையால் இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. கலாஓயாவிற்கு செக்கனுக்கு 614 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதாக, நீர்ப்பாசனப் பொறியியலாளர் சம்பத் சமரஜீவ தெரிவித்துள்ளார். (அ)

# வெங்காயம் விலை உயர்வு

கொழும்பு, நவ. 21

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரிய வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 400 ரூபாவாகவும் ஒரு கிலோ வெளிநாட்டு வெங்காயத்தின் மொத்த விலை 370 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

இதன்படி நேற்று காலை தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் ஒரு கிலோ உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 380 - 400 ரூபாவாக இருந்ததாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தியா, பாகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரிய வெங்காயத்தின் விலை ஒரேயடியாக அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org